***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No.30/2023 – P.W. 3 (LW- 3)***

| | |
|---|---|
| *Name* | ஜான் நெப்போலியன் |
| *Father/Husband's Name* | ஆரோக்கியம் |
| *Village* | பட்டிமார் |
| *Age* | *39* |

*1 மற்றும் 2* **எதிரிகள் ஆஜர். இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 17.09.2025*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகள் ஜீவானந்தம் மற்றும் அசோக் ஆகியோர்களை தெரியும். அ.சா.1 பெர்னான்டஸ் எனது உடன் பிறந்த அண்ணன் ஆவார். கடந்த 12.10.2022 ந் தேதி மாலை 6.00 மணியளவில் எனது அண்ணன் கெழுவத்தூர் நெல் கொள்முதல் மையத்திற்கு நெல் போடுவதற்காக வந்தார். நானும் அதே நெல் கொள்முதல் மையத்தில் இருந்தேன்.

2. நான் வீட்டிற்கு சென்று பணம் எடுத்துக்கொண்டு வருகிறேன் என்று என்னிடம் சொல்லிவிட்டு அவரது இருசக்கர வாகனத்தில் பட்டிமார் தெருவிலுள்ள அவரது வீட்டிற்கு செல்லும் வழியுள்ள பாலையூர் பாமணியாற்று படித்துறையில் இறங்கி குளிப்பதற்காக சென்றுள்ளார். அப்போது எதிரிகள் இருவரும் மண்ணுக்முண்டான் இடத்தில் நடந்த பிரச்சனைக்கு நீ தான் காரணம் என்று சொல்லிக்கொண்டு எதிரிகள் கையில் வைத்திருந்த பெரிய டார்ச் லைட்டால் எனது அண்ணனின் தலையிலும், இடது கால் தொடையிலும் அடித்தார்கள். அடி தாங்க முடியாமல் பாமணியாற்று அக்கரைக்கு தண்ணீரில் குதித்து சென்றுவிட்டார். எனக்கு தகவல் கேள்விபட்டு நான் சென்று பார்த்தபோது எனது அண்ணன்

மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வந்துவிட்டார். நான் என் அண்ணனனை மன்னார்குடி மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அப்போது என் அண்ணன் பெருகவாழ்ந்தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்று தகவல் சொன்னார். எனது அண்ணன் எதிரிகள் தாக்கியபோது, ஆற்றில் குதித்து தப்பித்து அக்கரை பகுதியில் ஏறிவிட்டார். எனது அண்ணன் குளிப்பதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அவரது இருசக்கர வாகனமான பிளண்டர் பிளஸ் வாகனத்தை எதிரிகள் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. அ.சா.1 பெர்னான்டஸ் எனது உடன் பிறந்த சகோதரர். பட்டிமார் என்ற ஊரிலுருந்து சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பாலையூர் 9 கி.மீ. தூரம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவம் குறித்து கேள்விபட்டு 1/2 மணி நேரத்திற்குள்ளாக அங்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். சம்பவம் குறித்து எனது சகோதரரான அ.சா.1 சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அ.சா.1 க்கும் எதிரிகளுக்கும் இடையே மண்ணுக்குமுண்டான் ரோட்டில் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 எனது சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 17.09.2025

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.